விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

# வலம்புரி Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 152 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 06 சனிக்கிழமை (20.05.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## தேர்தலை இடைநிறுத்தி சர்வாதிகார ஆட்சியை மேற்கொள்ளும் ரணில் அரசு

### மக்களின் அடிப்படை உரிமையையும் மீறுகின்றது – சஜித்



(கொழும்பு)

தேர்தலை இடைநிறுத்தி ஆட்சியை மேற்கொள்ளும் ரணில் அரசாங்கம் மக்களின் அடிப்படை உரிமைகளைக் கூட மீறுகின்றது என எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சுமத்தியுள்ளார்.

களனி பல்கலைக்கழகத்திற்கு அருகில் நேற்று முன்தினம் இடம் பெற்ற அமைதி வழி ஆர்ப்பாட்டத்தின்போது கைது செய்யப்பட்ட அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகேயை பார்வையிடுவதற்காக நேற்று ராகம வைத்தியசாலைக்கு சென்றபோதே எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இவ்வாறு தெரிவித்

11

## உடுப்பிட்டியில் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(கரணவாய்)

இமையாணன் உடுப்பிட்டி பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் நேற்று வெள்ளிக்கிழமை காலை மீட்கப்பட்டுள்ளது.

இதில் அதே இடத்தை சேர்ந்த கதிரித் தம்பி செல்வராசா

11

# சர்வதேச நீதிமன்றில் இலங்கையை நிறுத்துக

## அமெரிக்க பாராளுமன்றில் தீர்மானம் முன்வைப்பு

(வோஷிங்டன்)

**இறுதிக்கட்டப் போரின்போது நிகழ்ந்த யுத்தக் குற்றங்களுக்கு இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் முன்நிறுத்த வேண்டும் என அமெரிக்க பாராளுமன்றில் தீர்மானம் ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது.**

அமெரிக்க பாராளுமன்ற உறுப்பினர்களான டெபோரா ரோஸ் மற்றும் பில் ஜோன்சன் ஆகியோரால் இத்தீர்மானம் முன்வைக்கப்பட்டுள்ளது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் முன்னெடுக்கப்பட்ட நிலையில் இத்தீர்மானம் கொண்டு வரப்பட்டுள்ளது.

ஈழத் தமிழர்களுக்கு "ஜனநாயக ரீதியாகவும் சமத்துவமாகவும் பிரதிநிதித்துவம்" மற்றும் "நீடித்த அமைதியான அரசியல் தீர்வுக்கு" பொதுவாக் கெடுப்பு நடத்த வேண்டும் என்று

11

## இலங்கையின் அபிவிருத்திக்கு அதிகபட்ச ஆதரவு

### கனேடிய உயர்ஸ்தானிகர்

(கொழும்பு)

இலங்கையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு கனடா அதிகபட்ச ஆதரவை வழங்குமென கனேடிய உயர்ஸ்தானிகர் எரிக் வோல்ஷ் உறுதியளித்தார்.

பிரதமர் தினேஷ் குணவர்தனவுடனான சந்திப்பின்போது, இந்த உறுதி வழங்கப்பட்டுள்ளது.

11

## வெப்பம் மேலும் அதிகரிக்கலாம்

### போதுமான நீரை அருந்துமாறு அறிவுறுத்து

(கொழும்பு)

நாட்டில் நிலவும் வெப்பம் மேலும் அதிகரிக்கலாம் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவிப்பொன்றை வெளியிட்டுள்ளது.

இதன்படி வடக்கு, கிழக்கு, வடமத்திய

11

## வவு.வில் மாணவனைத் தாக்கி ரிக்ரொக்கில் காணொளி

### இரு மாணவர்கள் கைது; ஏனையவர்களுக்கு வலைவீச்சு

(வவுனியா)

வவுனியாவில் பிரபல பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்கள் சிலர் இணைந்து சக மாணவனை வீதியில் வைத்து தாக்கிய சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

வவுனியா பிரபல பாடசாலையில் கல்வி

11



## டிஜிட்டல் பொருளாதாரத்தை நோக்கி நாடு கொண்டு செல்லப்படும்

### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

(கொழும்பு)

நாட்டை டிஜிட்டல் பொருளாதாரத்தை நோக்கி கொண்டு செல்லும் பணியை துரிதப்படுத்துவது தொடர்பிலான அறிக்கையொன்றை ஒரு மாதத்திற்குள் சமர்ப்பிக்குமாறு துறை சார் இராஜாங்க அமைச்சர் மற்றும் அதிகாரிகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன் தினம் இடம்

04

## வடக்கு ஆளுநரின் வாசஸ்தலத்தில் மந்திரிக்கப்பட்ட பொருட்கள் மீட்பு

- ஜீவன் தியாகராஜா புதைக்க சொல்லியிருந்தார்
- மதகுருவை அழைத்து அகற்றப்பட்டன

06ஆம் பக்கம் பார்க்க

## மேலும் சில பொருட்களின் விலையை குறைக்க நடவடிக்கை

### நிதி இராஜாங்க அமைச்சர்



(கொழும்பு)

டொலருக்கு நிகரான ரூபாயின் பெறுமதியின் பலனை மக்களுக்கு வழங்கும் வகையில் அரசாங்கம் விசேட வேலைத் திட்டமொன்றைஅமுல் படுத்தி வருவதாக

11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மரண அறிவித்தல்



தோற்றம் 1935 . 04 . 08

மறைவு 2023 . 05 . 18

## கந்தப்பர் கதிர்காமத்தம்பி

(ஓய்வுநிலை நெசவுப் போதனாசிரியர்)

அல்வாயைப் பிறப்பிடமாகவும் நாகப்பாவளவு கொற்றாவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தப்பர் கதிர்காமத்தம்பி அவர்கள் 18.05.2023 (வியாழக்கிழமை) அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தப்பர்-சின்னாச்சிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற செல்லையா-சின்னமணி தம்பதியினரின் அன்பு மருமகனும் சரஸ்வதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான நடராசா, சுப்பிரமணியம், சிவபாதசுந்தரம், சதாசிவம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் கேசவமூர்த்தி(உதவி முகாமையாளர் - NSB நெல்லியடி), ஸ்ரீபாஸ்கரன்(France), காலஞ்சென்ற ராகினி (ஆசிரியை) ஆகியோரின் அன்புத் தந்தையும் கிரிஜா(ஆசிரியை-யா/ஞானசாரியார் கல்லூரி-கரவெட்டி), தனலட்சுமி(France)ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆதர்ஷ்(யா/ஹாட்லிக் கல்லூரி) அவர்களின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் 21.05.2023 நாளை ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊறணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நாகப்பாவளவு,
கொற்றாவத்தை,
வல்வெட்டித்துறை.

தகவல் : குடும்பத்தினர்
071 462 5071
(க.கேசவமூர்த்தி)

(C-6581)


# மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 55 வயது வியாபாரம், விவசாயம் செய்யும் மணமகனுக்கு 45 வயதிற்குட்பட்ட மணமகள் தேவை.

படம், குறிப்பு விடயத்தை Whatsapp இற்கு அனுப்பலாம்.

075 494 2505

(15566)

# கிளிநொச்சியில் வீடு வாடகைக்கு உண்டு

கிளிநொச்சி ஆனந்தபுரத்தில் உத்தியோகத்தர்கள் அல்லது பல்கலைக்கழக மாணவர்கள் தங்குவதற்கு வீடு வாடகைக்கு உண்டு. (வ)

076 097 3127

# UK Visit Visa

UK visit விசாவைத் துரிதமாகப் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கின்றீர்களா?
10 நாட்களில் உங்கள் கைகளில் Visit விசா.
பதிவுக் கட்டணத்துடன் விண்ணப்பிக்க நம்பிக்கையுடன் எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்.

Hybrid International Hub (pvt) Ltd,Jaffna
076 250 0098, 077 815 5920
021 222 1265

(C-6583)


# கண்ணீர் அஞ்சலி



எமது பாசமிகு மருகர்

## அமரர் கனகரட்ணம் பாஸ்கரன் (ரவி)


அவர்கள் (வேலணை கிழக்கு) கனடாவில் இறைபதமடைந்த செய்தி கேட்டு ஆறாத்துயர் கொள்கின்றோம். அன்னாரின் பிரிவால் வாடும் அவர் மனைவி. பிள்ளைகள் மற்றும் குடும்பத்தாரின் துயரில் நாமும் பங்கு கொள்கின்றோம். அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் நினைவுடன்

(15568)

இராசவீதி, கோப்பாய்.

பாலசுப்பிரமணியம் குடும்பம்



# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்

## பொன்னையா நடேசன் (கற்கண்டு)

மலர்வு 15.06.1935

உதிர்வு 20.04.2023

சிறந்த கணவனாய்... நல்ல தந்தையாய்...
செல்லத் தாத்தாவாய் எம்முடன் வாழ்ந்து
எம்மை வழிநடத்திய எம் தெய்வமே!
கற்கண்டாய் இனிக்கும் உம் பேச்சைக்கேட்க
எம் காதுகள் தவம் கிடக்கின்றன...
அன்பான உங்கள் அரவணைப்பைப்பெற
எம் உள்ளங்கள் ஏங்கித் தவிக்கின்றன...
எங்களைப் பிரிந்து நீங்கள்
விண்ணுலகம் சென்றாலும்
உங்கள் அன்பு வழியைப் பின்பற்றுவோம் ஐயா!
உங்கள் ஆத்மா சாந்திபெற
இறை அருளை வேண்டி உருகுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இராஜேஸ்வரி வீதி,
அரியாலை.

077 069 0528
077 284 5340

(15569)

என்றும் உம் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸ்துமா நோயினால் வருடாந்தம் 5 லட்சம் பேர் உயிரிழப்பு

## சுவாச நோய் நிபுணர் மருத்துவர் துஷ்யந்த தகவல்

(கண்டி)

**ஆஸ்துமா நோயினால் உலகளவில் வருடாந்தம் ஐந்து இலட்சம் பேர் உயிரிழப்பதாகவும் காற்று மாசுபாடு மற்றும் காலநிலை உள்ளிட்ட பல காரணிகளே இந்த நோய் உலகளவில் பரவுவதற்குக் காரணம் எனவும் கண்டி தேசிய வைத்தியசாலையின் சுவாச நோய் நிபுணர் மருத்துவர் துஷ்யந்த மத்கெதர தெரிவித்துள்ளார்.**

நேற்று முன்தினம் இடம் பெற்ற சர்வதேச ஆஸ்துமா தினத்தை கொண்டாடும் நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனை வலியுறுத்தியுள்ளார்.

கடுமையான குளிர், சிகரெட் பாவனை, வாகனங்கள் வெளியிடும் அதிகபடியான புகை, உரோமம் நிறைந்த விலங்குகளுடன் பழகுவது, மன உளைச்சல் உள்ளிட்ட பல விடயங்கள் ஆஸ்துமாவை ஏற்படுத்துவதாகவும் மருத்துவர் வலியுறுத்தினார்.

ஒவ்வொரு ஆண்டும் உலகம் முழுவதும் 265 மில்லியன் மக்கள் ஆஸ்துமாவால் பாதிக்கப்படுகின்றனர் என்றும் சிறு குழந்தைகள் உட்பட கிட்டத்தட்ட 500,000 குழந்தைகள் ஒவ்வொரு ஆண்டும் இறக்கின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் நோய் குறித்த விழிப்புணர்வு இல்லாததால் நோய் தீவிரமடைகிறது.

தொடர்ந்து இருமல், மூச்சுத் திணறல், மார்பில் சத்தம், அடிக்கடி தும்மல், கண்கள் மற்றும் மூக்கில் அரிப்பு, அடிக்கடி காய்ச்சல் போன்ற அறிகுறிகள் இருந்தால், தகுதியான மருத்துவரை அணுக வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். (நி)

# சதொச வழக்கிலிருந்து ஜோன்ஸ்டன் விடுதலை

(கொழும்பு)

லங்கா சதொச ஊழல் வழக்கில் இருந்து முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ விடுவிக்கப்பட்டுள்ளார்.



அத்துடன் குறித்த வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள மேலும் இருவரையும் விடுதலை செய்து கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று வெள்ளிக்கிழமை உத்தரவு பிறப்பித்துள்ளது.

முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, முன்னாள் கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனத்தின் தலைவர் எராஜ் பெர்னாண்டோ மற்றும் முன்னாள் அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் ராஜ் மொஹிதீன் மொஹமட் சக்கீர் ஆகியோருக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் குறித்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ 2011 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சராக இருந்த போது சட்டவிரோதமான முறையில் சதொச ஊழியர்களை தேர்தல் பணிகளில் ஈடுபடுத்தியதாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழு குற்றம் சுமத்தியிருந்தது குறிப்பிடத்தக்கது. (நி)

## ஜனாதிபதி ரணில் ஜப்பான் விஜயம்

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடுத்த வாரம் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு ஜப்பான் செல்லவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதன்படி நாளை மறுதினம் 22 ஆம் திகதி ஜப்பான் செல்லவுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது. (நி)

# சாதாரண, உயர்தரப் பரீட்சைகளை வழமை போல் நடத்தத் தீர்மானம்

## கல்வி அமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

க.பொ.த சாதாரண தரம் மற்றும் உயர்தரப் பரீட்சைகள் இரண்டையும் ஒரே வருடத்தில் நடத்துவதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

இரண்டு பிரதான பரீட்சைகளையும் நடத்துவது தொடர்பில் அடுத்தாண்டு தீர்மானிக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

அத்துடன் பாடசாலை கல்வியை வழமைக்கு கொண்டு வந்து பரீட்சை அட்டவணையை புதுப்பித்து வருவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (நி)

# உலகத் தமிழர் வரலாற்று மைய முள்ளிவாய்க்கால் நினைவிடத்தில் நினைவேந்தல்

## பெருமளவானோர் பங்கேற்பு





(லண்டன்)

முள்ளிவாய்க்காலின் இறுதி நாட்களில் கொத்துக்கொத்தாக தமிழ்மக்கள் இனப்படுகொலை செய்யப்பட்ட நினைவு நாள் வழமை போல் இந்த ஆண்டும் உலகத்தமிழர் வரலாற்று மைய வளாகத்தில் அமைந்துள்ள முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் பெருமளவான பொதுமக்கள் கலந்து கொள்ள உணர்வெழுச்சியுடன் கடைப்பிடிக்கப்பட்டது. (நி)

# தமிழர்களுக்காக குரல் கொடுப்பதை கனடா ஒருபோதும் நிறுத்தாது

## பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோவின் அறிக்கைக்கு இலங்கை கண்டனம்



(கொழும்பு)


தமிழர் இனப்படுகொலை நினைவேந்தல் தினத்தை அங்கீகரிக்கும் விதத்தில் கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ள கருத்துக்களை தொடர்ந்து இலங்கைக்கும் கனடாவிற்கும் இடையில் இராஜதந்திர மோதல் ஏற்பட்டுள்ளது.

கனடா பிரதமர் விடுத்துள்ள அறிக்கையை இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி கண்டித்துள்ளார்.

துன்பகரமான விதத்தில் ஏற்பட்ட உயிரிழப்புகளை 14 வருடங்களின்பின் நினைவுகூருகின்றோம் என தெரிவித்துள்ள கனடா பிரதமர் முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற இனப்படுகொலை உட்பட ஆயிரக்கணக்கான தமிழர்களின் உயிர்கள் இழக்கப்பட்டன, பலர் காணாமல் போனார்கள், காயமடைந்தார்கள், இடம்பெயர்ந்தார்கள்.

கொல்லப்பட்டவர்கள் உயிர்பிழைத்தவர்கள் மற்றும் அர்த்தமற்ற வன்முறையால் ஏற்பட்ட துயரத்துடன் தொடர்ந்தும் வாழும் அவர்களின் குடும்பத்தவர்கள் குறித்து எங்கள் சிந்தனைகள் உள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்காரணமாகவே கடந்த வருடம் மே18 ஆம் திகதியை தமிழ் இனப்படுகொலை நினைவு தினமாக நாங்கள் அங்கீகரித்தோம் என தெரிவித்துள்ள அவர் மோதலால் கொல்லப்பட்டவர்கள்,



உயிர்பிழைத்தவர்கள் உரிமைக்காகவும் இலங்கையில் தொடர்ந்தும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளவர்களிற்காக குரல் கொடுப்பதை கனடா நிறுத்தாது எனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்த அறிக்கையை கண்டித்துள்ள இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் இது இலங்கையில் முன்னெடுக்கப்படும் நல்லிணக்க முயற்சிகளிற்கு உதவியாக அமையாது எனவும் குறிப்பிட்டுள்ளார். (நி)

# உத்தியோகபூர்வமாக தனது கடமையை பொறுப்பேற்றார் செந்தில் தொண்டமான்



(கொழும்பு)

கிழக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள செந்தில் தொண்டமான் உத்தியோகபூர்வமாக தனது கடமையை நேற்று வெள்ளிக்கிழமை காலை கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் பொறுப்பேற்றுக் கொண்டார்.

கடந்த 16 ஆம் திகதி ஜனாதிபதி முன்னிலையில் பதவிப்பிரமாணம் பெற்றுக் கொண்ட ஆளுநர் நேற்று திருகோணமலையில் அமைந்துள்ள கிழக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இதில் அமைச்சர்களான ஜீவன் தொண்டமான், வியாழேந்திரன், கிழக்கு மாகாண சபையின் அரச திணைக்களங்களது செயலாளர்கள், அரச திணைக்கள உயர திகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விராட் கோலி அதிரடிச் சதம்
## ஐதராபாத்தை வீழ்த்தியது பெங்களூர்



16 ஆவது ஐ.பி.எல் கிரிக்கெட் போட்டி இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடந்து வருகிறது. இந் நிலையில் ஐதராபாத்தில் உள்ள ராஜிவ்காந்தி சர்வ தேச ஸ்டேடியத்தில் நேற்று நடைபெற்ற 65 ஆவது லீக் ஆட்டத்தில் ஐதராபாத் சன் ரைசர்ஸ், பெங்களூரு ராயல் சேலஞ்சர்ஸ் அணிகள் மோதின.

டாஸ் வென்ற பெங்களூரு அணி கப்டன் டு பிளசிஸ் பந்துவீச்சை தேர்வு செய்தார். அதன்படி, ஐதராபாத் அணி முதலில் களமிறங்கியது. தொடக்க ஆட்டக்காரர் அபிஷேக் ஷர்மா 11 ரன்னிலும் ராகுல் திரிபாதி 15 ரன்னிலும் அவுட்டாகினர். அடுத்து இறங்கிய கப்டன் மார்கிராமுடன் கிளாசன் ஜோடி சேர்ந்தார்.



இந்த ஜோடி 3 ஆவது விக்கெட்டுக்கு 76 ரன்கள் சேர்த்த நிலையில் மார்கிராம் 18 ரன்னில் ஆட்டமிழந்தார். பொறுப்புடன் ஆடிய கிளாசன் அதிரடியாக ஆடி சதமடித்து அசத்தினார். அவர் 104 ரன்னில் அவுட்டானார்.

கடைசிக் கட்டத்தில் ஹாரி புரூக் 27 ரன்கள் எடுத்து அவுட்டாகாமல் இருந்தார். இறுதியில், ஐதராபாத் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 186 ரன்களை குவித்தது.

இதையடுத்து, 187 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பெங்களூரு அணி களமிறங்கியது. இதில், அதிகபட்சமாக விராட் கோலி 63 பந்து களில் சதம் அடித்து ஆட்டத்தை இழந்தார். தொடர்ந்து, பிளெஸ்ஸி 71 ரன்கள் எடுத்தார். மக்ஸ்வெல் 5 ரன்களும் பிரேஸ்வெல் 4 ரன்களும் எடுத்து ஆட்டத்தை இழக்காமல் விளையாடி னர்.

இந்த ஆட்டத்தின் முடிவில், பெங்களூரு அணி 19.2 ஓவரில் 2 விக்கெட் இழப்பிற்கு 187 ரன்கள் எடுத்தது. இதன்மூலம், 8 விக்கெட் வித்தியாசத்தில் பெங்களூரு அணி ஐதரபாத்தை வீழ்த்தி அபாரமாக வெற்றி பெற்றுள்ளது. (4)

# 2024 ஆம் ஆண்டுடன் ரபேல் நடால் ஓய்வு


இந்த மாதம் நடைபெறும் பிரெஞ்சு ஓபனில் இருந்து விலகுவதாக ரபேல் நடால் அறிவித்துள்ள நிலையில், டென்னிஸ் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற இருப்பதாகவும் சூசகமாக தெரிவித்துள்ளார்.

இடுப்பில் ஏற்பட்ட காயம் காரண்மாக ஜனவரி மாதத்தில் இருந்தே ரபேல் நடால் போட்டிகளில் பங்கேற்பதை தவிர்த்து வருகிறார். இந்த நிலையில் தற்போது பிரெஞ்சு ஓபனில் இருந் தும் விலகுவதாக அவர் அறிவித் துள்ளார்.

மேலும், 2024 இல் ஓய்வு பெறுவார் என்றும் நடால் தெரிவித்துள்ளார். அத்துடன், சில மாதங்கள் ஓய்வெடுத்துக் கொண்டு, ஓய்வு பெறவிருக்கும் ஆண்டில் என்ன செய்யலாம் என்பதை முடிவு செய்ய இருப்பதாகவும் நடால் குறிப்பிட்டுள்ளார். 14 முறை பிரெஞ்சு ஓபன் பட்டம் வென்றுள்ள நடால், சமீபத்திய மாதங்களில் காயம் காரணமாக மிகவும் சோர்வாக உணர்ந் ததை அவர் குறிப்பிட்டுள்ளார். கடந்த நான்கு மாதங்களாக தம்மால் இயன்ற அளவு போராடி வருவதாகவும் நடால் தெரிவித் துள்ளார்.

பயிற்சிக்கு திரும்பினாலும், அவரால் வலி இல்லாமல் முழுமையான தீவிரமான பயிற்சியை மேற்கொள்ள முடியாமல் போனது.

இந்த நிலையில், தாம் எப்போது முறையான பயிற் சிக்கு திரும்புவேன் என்பது தற்போதைய நிலையில் குறிப்பிட முடியாமல் உள்ளது என விளக்கமளித் துள்ளார். இதனையடுத்தே, 2024 இல்ஓய்வு பெறும் முடிவுக்கு வந்துள் ளதாக நடால் சூசகமாக குறிப்பிட்டுள்ளார். (4)




# மரண அறிவித்தல்

தோற்றம்
24
.
11
.
1974



மறைவு
18
.
05
.
2023

## கிருஸ்ணபிள்ளை சிவகுமார் (சிவா)

சோளங்கன் கரணவாய் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கிருஸ்ணபிள்ளை சிவகுமார் (சிவா) அவர்கள் நேற்று முன்தினம் (18.05.2023) வியாழக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் கிருஸ்ணபிள்ளை - காலஞ்சென்ற ரேவதியம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - கனகமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், கிருபாதேவி (கிருபா) அவர்களின் ஆருயிர்க் கணவரும், அனுஜன் (அஞ்சித்தா), பிரசோன், சாருஷா (சாரு) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ராசன் செல்வகுமார் (ராசன் - சுவிஸ்), சுபாஜினி (சுபா - சுவிஸ்), சுகந்தினி (சுகந்தி - பிரான்ஸ்), பாலகுமார் (ராசா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.05.2023) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பூவரசந்திட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சோளங்கன்
கரணவாய் மேற்கு, கரவெட்டி. (C-6585)

தகவல்: குடும்பத்தினர்
077 967 8766


# ராஜஸ்தான் வெற்றி




## டிஜிட்டல்...

பெற்ற டராஸ் தலைமையகத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துரைத்தபோதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வரி சேகரிப்பு பணிகளுக்காக நிறுவப்பட்டுள்ள வருமான நிர்வாக முகாமைத்துவ தகவல் கட்டமைப்பான ரெமிஸ் (RAMIS) தொடர்பில் 1993ஆம் ஆண்டில் தாம் பிரதமராக பதவி வகித்தபோது ஆராயப்பட்டதாக ஜனாதிபதி இதன்போது தெரிவித்தார்.

எனினும், 2023ஆம் ஆண்டிலும் அதனைப் பற்றிப் பேசிக்கொண்டிருப்பது கவலைக்குரியதெனவும், நாட்டை டிஜிட்டல் பொருளாதாரத்தை நோக்கி கொண்டு செல்லும் பணிகளை ஒருபோதும் தாமதப்படுத்தக்கூடாது எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

நாட்டை டிஜிட்டல் பொருளாதாரத்தை நோக்கி துரிதப்படுத்துவதற்கு நிகரான பலன்களை விரைவில் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கையின் டிஜிட்டல் மய மாக்கலை துரிதப்படுத்தும் வகையில் "ஈ வ்ணிகம்" யுகத்தின் ஆரம்பமாக டராஸ் நிறுவனத்தை இலங்கையில் நிறுவியமைக்காக அலிபாபா நிறுவனத்திற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நன்றி தெரிவித்தார். (ம-7,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்கள் மத்தியில் வேகமாக பரவும் இன்புளுவன்சா வைரஸ் தொற்று

(கொழும்பு)
நாட்டில் சிறுவர்கள் மத்தியில் இன்புளுவென்சா வைரஸ் தொற்று வேகமாக பரவி வருவதாக கொழும்பு சீமாட்டி சிறுவர் மருத்துவமனையின் மருத்துவ நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

இதனால், அதிக காய்ச்சல், இருமல், தலைவலி மற்றும் சுவாசப் பிரச்சினைகளால் சிறுவர்கள் பாதிக்கப்படலாம் என அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த வைரஸ் தொற்று பரவல் தற்போது பாடசாலைகள், தனியார் வகுப்புகளில் அதிகம் பரவி வருகின்றது.

எனவே, தமது பிள்ளைகளுக்குக் காய்ச்சல், இருமல், தலைவலி அல்லது சுவாசப் பிரச்சினைகள் இருப்பின், அவர்களை பாடசாலைகளுக்கு அனுப்பாமல் இருப்பது சிறந்தது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இன்புளுவென்சா வைரஸ் தொற்று கிட்டத்தட்ட கொவிட் தொற்றை போன்றது. அது மக்களிடையே விரைவாக பரவக் கூடியது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (நி)

# இலங்கைக்கு தொடர்ந்தும் ஆதரவளிக்க சீனா தயார்

(கொழும்பு)
சீனாவிற்கும் இலங்கைக்கும் இடையில் நெருங்கிய ஒத்துழைப்பை ஏற்படுத்துவதற்கான வழிமுறைகளை ஆராயுமாறு சீனா வின்யுனான் மாகாண ஆளுநர் தெரிவித்துள்ளார்.

பிரதமர் தினேஷ் குணவர்த்தனவை அலரிமாளிகையில் சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் இதனைத் தெரி வித்துள்ளார்.

அத்துடன் கல்வி மற்றும் தொழில்நுட்ப திறன் மேம்பாட் டிற்கு இலங்கைக்கு தொடர்ந் தும் ஆதரவளிக்க தயாராக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# கடவுச்சீட்டை பெற்றுக் கொடுக்க தரகர்களாக செயற்பட்ட 9 பேர் கைது

(கொழும்பு)
குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள வளாகத்தில் இருந்தவாறு, பொதுமக்களிற்கு கடவுச்சீட்டைப் பெற்றுக் கொடுக்க, தரகர்களாக செயற்பட்ட 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் கடவுச்சீட்டைப் பெற்றுக் கொள்வதற்காக, குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்திற்கு பிரவேசிக்கும் பொதுமக்களிடம், அவர்கள் பணம் பெற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இதன்படி, வரிசைகளில் காத்திருக்காமல், உரிய நடை முறைகளுக்கு அப்பால், கடவுச்சீட்டைப் பெற்றுக் கொடுப்பதற்காக, குறித்த சந்தேகநபர்கள், விண்ணப்பதாரர்களிடம் தலா 25 ஆயிரம் ரூபாவைப் பெற்றுக் கொண்டமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (நி)

# அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி

(கொழும்பு)
அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி சற்று வீழ்ச்சியடைந்துள்ளது.

அதன்படி நேற்று அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு விலை ரூ.300.65 ஆகவும் விற்பனை விலை ரூ.314.08 ஆக காட்டப்பட்டது.

அமெரிக்க டொலரின் மதிப்பு நேற்று முன்தினம் ரூ.300க்கும் கீழ் குறைந்திருந்தது.

இதன்படி, இலங்கையில் உள்ள பல வர்த்தக வங்கிகளின் நாணய மாற்று வீதத்தைக் காட்டும் பட்டியல்களில் அமெரிக்க டொலரின் கொள்வனவு பெறுமதி ரூ.300. என்ற வரம்பிற்கு கீழ் குறிப்பிடப்பட்டிருந்தது.

மக்கள் வங்கியின் தகவலின்படி, அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு விலை ரூ. 296.59 மற்றும் விற்பனை விலை ரூ.313.52 ஆக பதிவாகியுள்ளது. (நி)

# தகுதியற்ற உள்ளூராட்சி ஆணையாளர்களுக்கு பதிலாக புதிய அதிகாரிகளை நியமிக்க நடவடிக்கை

(கொழும்பு)
தகுதியற்ற பிரதேசசபை செயலாளர்கள் மற்றும் மாநகர ஆணையாளர்களுக்கு பதிலாக புதிய அதிகாரிகளை நியமிக்கும் நடவடிக்கை ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

தகுதியற்ற சுமார் 70 அதிகாரிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் ஜனக வக்கும்புர தெரிவித்தார்.

அவர்களுக்கு பதிலாக தகுதியான அரச அதிகாரிகள் நியமிக்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்

மக்கள் பிரதிநிதிகள் இன்மையால் பொறுப்புக்கூற வேண்டிய தகுதிவாய்ந்த அதிகாரிகள் உள்ளூராட்சிமன்றங்களுக்கு நியமிக்கப்பட வேண்டும்.

தகுதி இருந்தாலும் மக்களுக்கு சேவையாற்றக்கூடிய வினைத்திறன் மிக்கவர்கள் தெரிவு செய்யப்படும் சந்தர்ப்பத்தில் அது குறித்து விசேட கவனம் செலுத்தப்படும் எனவும் இராஜாங்க அமைச்சர் ஜனக வக்கும்புர மேலும் தெரிவித்தார். (நி)

## ஜனக ரத்நாயக்க பதவி நீக்கம்

# அரசாங்கத்தின் பிரேரணைக்கு எதிராக வாக்களிப்பதற்கு ஐ.ம.ச தீர்மானம்

(கொழும்பு)
பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்கவை பதவி நீக்கம் செய்வதற்கான அரசாங்கத்தின் பிரேரணைக்கு எதிராக வாக்களிப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளரான பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல இதனைத் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் இந்த தீர்மானத்தை சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு எதிரான நடவடிக்கையாக கருதி இதற்கு எதிராக வாக்களிக்க தீர்மானித்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி)


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் திரு. இ. ஜெனன் அவர்களின் பாசமிகு தந்தை

அமரர். வெற்றிவேலு இரத்தினசிங்கம்

அவர்கள் காலமானதையிட்டு துயரடைகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு அவரின்குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம். (5555)



தோற்றம்: 27.09.1943
மறைவு: 16.05.2023

பாடசாலைச் சமூகம்,
யா/ கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை.


# இராசிபலன்

20.05.2023
வைகாசி 06, சனிக்கிழமை
பிரதமை முன்னிரவு 09.51 மணிவரை
கார்த்திகை முற்பகல் 8.25 மணிவரை
சுபநேரம் -2.52-4.22 மணிவரை
இராகுகாலம்-8.52-10.22 மணிவரை
சந்திராஷ்டமம்-சித்திரை.

வளவன்


மேஷம்
தன்னம்பிக்கையும் துணிவும் அதிகரிக்கும் நாள், குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.


கடகம்
விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், புகழ் மிக்கவர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், அதிர்ஷ்ட வாய்ப்புகள் வந்து சேரலாம்.


துலாம்
எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், பணப் பற்றாக் குறையுண்டு, வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம்.


மகரம்
மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், தாழ்ந்த சுபாவமுண்டு.


ரிஷபம்
பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.


சிம்மம்
சொன்ன சொல்லை காப்பாற்றி மகிழ்வீர்கள், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், சிறப்பான நாள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.


விருச்சிகம்
இரவு பகலாக பாடுபட்ட தற்கேற்ப பலன் கிடைக்கும்,நண்பர்கள் வழியில் அனுகூலம் உண்டு, முயற்சிகளில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.


கும்பம்
மனதில் தோன்றுவதைச் செய்வீர்கள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், உறவினர் வழியில் எதிர்பார்ப்புகள் நிறைவேறும் வாய்ப்புண்டு.


மிதுனம்
புதிய நட்பால் பொருள் விரயங்கள் ஏற்படலாம், வியாபாரத்தை மாற்றம் செய்யும் எண்ணம் உருவாகும், குடும்பப் பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது.


கன்னி
நண்பர்களிடையே நிலவிய கசப்பு உணர்வுகள் அகலும், சாமர்த்தியமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், ஆன்றோர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், பயணங்கள் கைகூடும்.


தனுசு
இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், வர வேண்டிய பாக்கிகள் வந்து சேரலாம், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.


மீனம்
பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், நேற்றைய பிரச்சினையொன்று நல்ல முடிவுக்கு வரலாம், போசன சுகமுண்டு.

நன்றி செலுத்தும் போது தான் ஒருவன் நல்ல மனிதனாகின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு ஆளுநருக்கு எதிராக யாழில் நேற்று போராட்டம்

(அராலி)

**வடக்கு ஆளுநராக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள பி.எஸ்.எம் சாள்ஸ் வருவாய்க்கு அதிகமான சொத்துக்களை சேர்த்து பல ஊழல் முறைகேடுகளுடன் தொடர்புடையவர் ஆக இருப்பதால் அவரை வடக்குக்கு அனுப்பக் கூடாது என ஊழலுக்கு எதிரான அமைப்பினர் நேற்று வெள்ளிக்கிழமை யாழில் உள்ள வடமாகாண ஆளுநர் செயலகம் முன் அடையாளம் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.**



இதன்போது போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கருத்து தெரிவிக்கையில்,

கொழும்பில் பல கோடி பெறுமதியான ஆறு வீடுகளை கொள்வனவு, வவுனியா ஓமந்தை பகுதியில் எரிபொருள் நிலையத்தை கொண்டு வரவு செய்வதற்கு எவ்வாறு பணம் வந்தது?, அதனை அண்டியுள்ள 30 ஏக்கர் காணியை அடாவடித்தனமாக அபகரித்தது ஏன்?.ஆசிரியர் இடமாற்றத்தின் போது ஒரு இலட்சம் ரூபாய் லஞ்சம் பெற்றமை தொடர்பில் நடவடிக்கை எடுக்காதது ஏன். 2021 இல் 25 பேருக்கு ஆசிரியர் நியமனத்தின் போது இலஞ்சம் வாங்கிய பணம் எங்கே, முல்லைத்தீவில் மணல் கொள்ளையின் போது கோடிக்கணக்கில் உழைத்த பணம் எங்கே, மன்னாரில் 12 ஏக்கர் காணியை பிஷப் ஹவுஸுக்கு கொடுத்து மிகுதிக் காணியை அபகரித்தது ஏன்? இவ்வாறு பல மோசடிகளுடன் தொடர்புடையவரை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வடமாகாண ஆளுநராக நியமித்தமையை மீள் பரிசீலனை செய்ய வேண்டும்.

எமது கோரிக்கைகள் நிறைவேற்றப் படாவிட்டால் தொடர்ந்தும் ஆளுநர் செயலகம் முன் போராட்டத்தில் ஈடுபடுவோம் என தெரிவித்தனர். (4-6-104)

# வடக்கு ஆளுநரின் வாசஸ்தலத்தில் மந்திரிக்கப்பட்ட பொருட்கள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண ஆளுநரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் இருந்து மந்திரிக்கப்பட்ட பொருட்கள் நேற்று மீட்கப்பட்டுள்ளன.

குறித்த இல்லத்தில் இருந்து இந்து மத குரு ஒருவரின் உதவியுடன் மந்திரிக்கப்பட்ட பொருட்கள் மீட்கப்பட்டு உரிய முறையில் அழிக்கப்பட்டதாக ஆளுநர் செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன.

வடமாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள பி. எஸ். எம். சாள்ஸ் எதிர்வரும் வாரம் பதவியேற்க உள்ள நிலையில், வாசஸ்தலத்தினை தூய்மையாக்கும் பணி செயலக ஊழியர்களால் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது ஆளுநரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் உள்ள அறைகளில் போத்தல்களில் அடைக்கப்பட்ட மந்திரிக்கப்பட்ட பொருட்கள் காணப்பட்டதை அவதானித்த ஊழியர்கள் குறித்த விடயம் தொடர்பில் உயர் அதிகாரிகளுக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

இதனையடுத்து அதிகாரிகள் முன்னாள் வடக்கு மாகாண ஆளுநரை குறித்த விடயம் தொடர்பில் வினவிய போது, அவை மந்திரிக்கப்பட்ட பொருட்கள் என்வும் அவற்றினை நிலத்தில் கிடங்குவெட்டி தாக்குமாறும் கூறியுள்ளார்.

இதனையடுத்து ஆளுநரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்திற்கு இந்து மத குரு ஒருவர் வரவழைக்கப்பட்டு மந்தரிக்கப்பட்ட பொருட்கள் அனைத்தும் உரிய முறையில் அகற்றப்பட்டு நிலத்தில் கிடங்கு வெட்டி தாக்கப்பட்டது. (4-6)

# அரசாங்கத்தை நம்பி இருக்காது சுயமாக செயற்பட வேண்டும்

## கல்வி இராஜாங்க அமைச்சர்

(சாவகச்சேரி)

சகல விடயங்களுக்கும் அரசாங்கத்தை நம்பி இருக்காது சுயமாக செயற்பட வேண்டிய காலகட்டத்தில் நாம் இருக்கிறோம் என கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை வரணி மத்திய கல்லூரியில் வரணி ஒன்றியம் மற்றும் இலங்கை இராணுவம் ஆகியோரின் ஒத்துழைப்போடு புனரமைக்கப்பட்ட கட்டடத் திறப்புவிழா நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

இந்த பிரதேசத்தில் கடந்த காலங்களில் சுமுகமான நிலைமை இருக்கவில்லை.

30 வருட காலத்திற்கும் மேலான உள்நாட்டு யுத்தம் காரணமாக இந்த மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக பாடசாலை மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகள் மிக மோசமாக பாதிக்கப்பட்டிருந்தது.

ஆனால் இன்று அதிலிருந்து மீண்டு வடக்கு மாகாணம் கல்வியில் வீறுநடை போடுகிறது.

சில மாதங்களுக்கு முன்னர் திருக்கோவில் வலயக்கல்விப் பணிப்பாளரின் ஏற்பாட்டில் இடம் பெற்ற சர்வதேச நடன விழாவிற்கு சென்றிருந்தேன். விழா மிகப் பிரமாண்டமாக இடம் பெற்றிருந்தது. ஆனால் அந்த நிகழ்வானது நன்கொடையாளர்களின் நிதிப் பங்களிப்பு மூலமே இடம்பெற்றது.

மத்திய கல்வி அமைச்சோ அல்லது மாகாண கல்வி அமைச்சோ ஒரு சதத்தை கூட அந்த நடன நிகழ்விற்கு வழங்கியிருக்கவில்லை. இவ்வாறான செயற்பாடுகள் தான் இன்று தேவை. தொட்டதற்கெல்லாம் அரசாங்கத்தையும் அமைச்சினையும் நம்பி இருப்பது இந்தக் காலத்திற்கு பொருத்தமாக அமையாது. சுயமாக செயற்பட வேண்டிய காலகட்டத்தில் இருக்கிறோம் என மேலும் தெரிவித்தார். (4-6-30)

# வடக்கு மாகாண பதில் சுகாதார பணிப்பாளராக சத்தியமூர்த்தி நியமனம்



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தின் பதில் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளராக வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி நேற்று பதவியை பொறுப்பேற்றுக் கொண்டார்.

வடமகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஒருவர் நியமிக்கப்படும் வரை, மருத்துவர் சத்தியமூர்த்தி யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் பதவிக்கு மேலதிகமாக இக்கடமையை ஆற்றுவார் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (4-6-33)

# புங்குடுதீவில் நடமாடும் இலவச மருத்துவ முகாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா மருத்துவமனை மருத்துவ குழாமினரால் தீவகப் பிரதேசங்களில் நடமாடும் மருத்துவ சேவையை முன்னெடுக்கும் இலவச மருத்துவ முகாம் இன்று சனிக்கிழமை புங்குடுதீவு பிரதேச மருத்துவமனை, யாழ்.போதனா மருத்துவமனையின் வைத்திய நிபுணர்கள், துறைசார் வைத்திய அதிகாரிகள் மற்றும் சம்பந்தப்பட்ட ஏனைய உத்தியோகத்தர்களும் கலந்து கொள்ளும் மருத்துவ முகாம் ஒன்று நடைபெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே புங்குடுதீவு பிரதேசத்தைச் சேர்ந்த பொதுமக்கள் மேற்படி மருத்துவ முகாமில் பங்குபற்றி பயன் பெறுமாறு யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (4-6)



பாதுகாப்பான போக்குவரத்துப் பாவனையை மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்தல் தொடர்பான முன்னாயத்தக் கலந்துரையாடல் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் அ.சிவபாலசுந்தரன் தலைமையில் கடந்த 15 ஆம் திகதி மாவட்டச் செயலக அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது. (படம்:-சிவசாந்தன்)

# சாதாரணதர மாணவர்களுக்கான இலவசக் கல்விக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்தும் நோக்குடன் யாழ்.இந்துக்கல்லூரி கணித ஆசிரியர் அமரர் செல்லையா தவராஜாவின் ஞாபகார்த்தமாக தமிழ் மக்கள் கூட்டணியின் கல்வி மேம்பாட்டுப் பிரிவு இலவசக் கல்வி கரத்தரங்கு ஒன்றினை நடத்தவுள்ளது.

மேற்படி கருத்தரங்கானது நாளை 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு சித்தங்கேணிச் சந்தியிலுள்ள மகா கணபதி மண்டபத்திலும் மறுநாள் திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரிக்கு அருகிலுள்ள DCM கல்வி நிலையத்திலும் நடைபெறும். கணிதம் மற்றும் விஞ்ஞான பாடங்களைக் கொண்டதாக இக்கருத்தரங்கு அமையும்.

இக்கருத்தரங்கில் பங்குபற்றும் மாணவர்களுக்கு, கொழும்பு பிரபல பாடசாலைகளின் வினாத்தாளுடன் கூடிய கையேடுகள் மற்றும் கருத் தரங்கில் பங்குபற்றுவதற்குத் தேவையான எழுது கருவிப் பொருட்கள் என்பன வழங்கப்படும்.

எனவே குறித்த கருத்தரங்கில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் தங்களின் பெயர் மற்றும் பாடசாலையின் விபரங்களை 075 024 2472 என்னும் இலக்கத்திற்கு அனுப்பி பதிவுகளை மேற்கொள்ள முடியும் என தமிழ் மக்கள் கூட்டணி கல்வி மேம் பாட்டுப் பிரிவின் பொறுப்பாளர் வ.பார்த்தீபன் அறிவித்துள்ளார். (4-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு நோய் நிவாரணியாக

## வலி நிவாரணி மாத்திரைகளை உட்கொள்வது ஆபத்தானது

### சுகாதார ஊக்குவிப்பு செயலகம் எச்சரிக்கை

(கொழும்பு)

டெங்கு நோய் நிவாரணியாக வலி நிவாரணி மாத்திரைகளை உட்கொள்வதால் மரணங்கள் சம்பவிக்கலாம் என சுகாதார ஊக்குவிப்பு செயலகம் பொது மக்களை எச்சரித்துள்ளது.

கடும் காய்ச்சல் மற்றும் அதிக உடல்வலி மற்றும் பாரிய தலைவலி காரணமாக மக்கள் மேற்படி வலி நிவாரணி மாத்திரைகளை உட்கொண்டு வருவதாகவும் அதனால் சில மரணங்கள் பதிவாகியுள்ளதாகவும் அச்செயலகம் பொதுமக்களை எச்சரித்துள்ளது.

வலி நிவாரணிகளை கொள்வதனால், மருத்துவர்களின் ஆலோசனை இல்லாமல் அதனை உட்கொள்ள வேண்டாமென்றும் சுகாதாரத் துறை எந்த விதத்திலும் அதற்கான அனுமதியை வழங்காது என்றும் அந்தச் செயலகம் அறிவித்துள்ளது.

டயிப்லோபேடேக் சோடியம், இப்யுப்ரோபன், மேபேநமிக்எயிட், இன்டோமெதசின், நெப்ரொக்ஸ்சென், செலேகொக்சிப், எஸ்பிரின் ஆகிய மருந்துகள் பல்வேறு வர்த்தகப் பெயர்களில் வலி நிவாரணிகளாக விற்பனை செய்யப்படுகின்றன.

இந்த மாத்திரைகள் வலி நிவாரணியாக அமைந்தாலும் டெங்கு நோயின் போது அவற்றைப் பாவித்தால் மோசமான நிலை உருவாகுமென்றும் மரணமும் சம்பவிக்கக் கூடும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

இக்காலங்களில் ஏற்படும் காய்ச்சல்களுக்கு முதலில் சிறந்த ஓய்வைப் பெற்றுக் கொள்வது முக்கியம். அத்துடன் நீர் ஆகாரத்தை அதிகரிப்பது சிறந்த பலனளிக்கும் எனவும் குறிப்பிட்டுள்ள அச்செயலகம் தேவைப்பட்டால் பரசிட்டமோல் மாத்திரையை மாத்திரம் உபயோகப்படுத்துமாறும் தெரிவித்துள்ளதுடன் 2 நாட்களுக்கு மேல் காய்ச்சல் நீடிக்குமானால், பொருத்தமான மருத்துவரிடம் ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளுமாறும் அச்செயலகம் தெரிவித்துள்ளது. (நி)

# இனப்படுகொலைக்கு நீதி கோரி லண்டனில் ஆர்ப்பாட்டம்




(லண்டன்)

முள்ளிவாய்க்கால் இனஅழிப்பின் 14 ஆவது ஆண்டு நினைவு தின நாளில் நீதி வேண்டி கண்டனப் பேரணி லண்டனில் இடம்பெற்றது. (நி-6)

# பணிப்புறக்கணிப்பிற்கு தயாராகும் தனியார் பேருந்து உரிமையாளர்கள்

(கொழும்பு)

ஒருநாள் சேவைப் புறக்கணிப்பை மேற்கொள்வதற்கு, இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம், தயாராகிறது.

பயணிகள் போக்குவரத்து பேருந்துகளில் இருந்து, அதிகளவு புகை வெளியேறுவது தொடர்பில், மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம் சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்கிறது.

இந்த சோதனை நடவடிக்கைகள், உனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

அவ்வாறு நடவடிக்கை எடுக்காத பட்சத்தில், ஒருநாள் சேவைப் பணிபுறக்கணிப்பில் ஈடுபட உள்ளதாக இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன எச்சரித்துள்ளார்.

நாட்டில் உதிரிப் பாகங்கள் இல்லாதமையாலும் அவற்றின் விலை உயர்வு காரணமாகவும் பேருந்துகள் அதிகளவில் புகையினை வெளியிடுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் இலங்கையில் தரமற்ற டீசல் விற்பனை செய்யப்படுகின்றது.

அவ்வாறு விற்பனை செய்யப்படுவதால், வாகனத்தில் அதிகளவான புகை வெளியேற்றப்படுவதாகவும் கெமுனு விஜேரத்ன சுட்டிக்காட்டியுள்ளார். (நி)

# நாட்டில் 25 வீதமான மக்கள் உயர் இரத்த அழுத்தத்தால் பாதிப்பு

(கொழும்பு)

இலங்கையில் சுமார் 25 வீதமான மக்கள் உயர் இரத்த அழுத்தம் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையின் மொத்த சனத்தொகையில் நான்கு பேரில் ஒருவருக்கு உயர் இரத்த அழுத்தம் காணப்படுவதாக கொழும்பு தேசிய மருத்துவமனையின மருத்துவ நிபுணர் பேராசிரியர் பிரசாத் கட்டு லந்த தெரிவித்துள்ளார்.

உலக உயர் இரத்த அழுத்த தினம் அண்மையில் கொழும்பு தேசிய மருத்துவமனையில் அனுஷ்டிக்கப்பட்ட போது அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார். (நி)

# சுற்றுலா முகவர் சங்க மாநாடு இந்த முறை இலங்கையில் ஹரின்

(கொழும்பு)

இந்திய சுற்றுலா முகவர் சங்க மாநாட்டை இந்த முறை இலங்கையில் நடத்துவதற்கு தீர்மானித்துள்ளது.

இது தொடர்பில் சுற்றுலா அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவிக்கையில், இந்த மாநாடு எதிர்வரும் ஜுலை மாதம் இடம்பெறவுள்ளது.

இந்த மாநாட்டில் 450 உயர்மட்ட வர்த்தக பிரதிநிதிகள் பங்கேற்கவுள்ளனர். இலங்கையின் சுற்றுலாத்துறைக்கு நன்மை பயக்கும் வகையில் இந்த மாநாடு அமையும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# இராணுவ வீரர்களுக்கு பதவி உயர்வு

(கொழும்பு)

இலங்கை இராணுவம் மற்றும் கடற்படை அதிகாரிகள் பலருக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

நேற்று வெள்ளிக்கிழமை தேசிய இராணுவ வீரர்கள் தின கொண்டாட்டத்துடன் இணைந்து இந்த பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி இலங்கை இராணுவத்தின் 402 அதிகாரிகளும் 3,348 இதர நிலைகளும் அவர்களின் அடுத்த தரத்திற்கு பதவி உயர்வு பெறவுள்ளனர்.

இதேவேளை இலங்கை கடற்படையின் 1,731 அதிகாரிகளுக்கும் பதவி உயர்வு வழங்கப் பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி)


# தனுஜீகா அடைவு கடை

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2022 ஆம் ஆண்டு 31.06.2022 இற்கு முன்னர் அடகு வைத்த நகைகள் யாவற்றையும் 2023 ஆம் ஆண்டு ஆனி மாதம் 15 ஆம் திகதி (15.06.2023) இற்கு முன்னர் மீட்கவும். மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தைக் கட்டிப் புதுப்பித்துக் கொள்ளவும். புதுப்பிக்கத் தவறின் (15.06.2023) ஆம் திகதியன்று விற்கப்படும் என்பதனை வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றேன்.

**குறிப்பு:- 2022 ஆம் ஆண்டு 6 ஆம் மாதம் 31 ஆம் திகதிக்கு முற்பட்ட நகைகள் யாவும் விற்கப்படும்.**

**உரிமையாளர்,**
**11/D நெடுங்குளம் வீதி,**
**கொழும்புத்துறை,**
**யாழ்ப்பாணம்.**

**077 186 8035**

(15561)



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>உயரம்:5'8<br>தகைமை/தொழில்: A/L Manager (mpcs)<br>எதிர்பார்ப்பு: பொறுப்பான பெண்<br>தொ.இ: B/13529 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>உயரம்:5'<br>தகைமை/தொழில்:-BSc, msc (civil engineerig) UK<br>எதிர்பார்ப்பு: engineer (civil)<br>தொ.இ:G/13596 |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி<br>கி.பா: 12 1/4<br>உயரம்: 5'4<br>தகைமை/தொழில்: BSc,msc (London) நிறைவேற்று அதிகாரி<br>தொ.இ: B/13530 | பிறப்பு:1993 இந்து<br>நட்சத்திரம்:ரோகினி கி.பா: 52<br>உயரம்:165cm<br>தகைமை/தொழில் BSc ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: உயர்பதவி<br>தொ.இ:G/13605 |
| பிறப்பு:1983 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி<br>கி.பா:5'<br>உயரம்: O/L (மேசன்)<br>தொ.இ: B/13531 | பிறப்பு:1996 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 10 இல் சூரி. செவ்வாய்<br>உயரம்:168cm<br>தகைமை/தொழில்: தாதி (தனியார்)<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ:G/13622 |
| பிறப்பு:1994 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>தகைமை/தொழில்: கல்வியியற் கல்லூரி ஆங்கில ஆசிரியர்<br>தொ.இ: B/13537 | பிறப்பு: 1995Rc<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 9 இல் சூரி. செவ்<br>உயரம்: 5'5<br>தகைமை/தொழில்: A/L Beautician (அழுக்கலை).<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ:G/13623 |

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 183



அந்த வழியிலிருந்து நாம் சிறிது விலகி இந்தப் பொக்கிஷ நிலவறைக்கு வந்திருக்க வேண்டும். இப்போது கந்தமாறன் போகும் வழியைத் தொடர்ந்து சென்றால், எப்படியும் வெளியேறும் வாசலைக் கண்டு கொள்ளலாம். பிறகு ஏதேனும் உபாயம் செய்து தப்பிக்கலாம்.

அப்படி அவசியம் நேர்ந்தால், கந்தமாறனிடமே உதவி கேட்கலாம். இல்லாவிட்டால் அவனையும் அந்தக் காவலனையும் ஒரு கை பார்த்து விட்டுத் தப்பிச் செல்லலாம். எனவே, கந்தமாறனை இப்போது பின் தொடரலாம்.

முதலில், தீவர்த்தி வெளிச்சம் நிலவறைக்கு அருகில் வருவது போலிருந்தது. வந்தியத்தேவன் மூச்சைப் பிடித்துக் கொண்டு நின்றான். பிறகு அவ்வெளிச்சம் அகன்று செல்வது போலிருந்தது. அதற்குள் வந்தியத்தேவன் சுற்றுமுற்றும் பார்த்தான். அந்த நிலவறைக்குள் பிரவேசித்த படிக்கட்டு எது என்பதை அறிந்து கொண்டான். அதன் வழியாகக் கீழே இறங்கி மீண்டும் மேலேறினான்.

தீவர்த்தி வெளிச்சத்தை விட்டு விடாமல், அதிகமாகவும் நெருங்காமல், காலடி ஓசை கேட்காதபடி மெதுவாக அடிவைத்து நடந்து சென்றான். வளைந்தும் நெளிந்தும் சுற்றியும் சுழன்றும் ஏறியும் இறங்கியும் சென்ற அந்தச் சுரங்கப் பாதையில் நாமாக இருளில் நடந்து வழி கண்டு பிடித்துப் போவது எவ்வளவு அசாத்தியமான காரியம்! வாழ்க கந்தமாறன்! அவன் இப்போது தன்னை அறியாமல் நமக்குச் செய்யும் உதவிக்கு எப்போது என்ன கைம்மாறு செய்யப் போகிறோம்!

அதற்கு ஒரு சந்தர்ப்பம் அவ்வளவு சீக்கிரத்திலேயே கிடைக்கும் என்று வந்தியத்தேவன் எண்ணவேயில்லை!

சுரங்கப் பாதையின் முடிவு வந்து விட்டது. எதிரில் ஒரு பெருஞ்சுவர் தெரிந்தது. அதில் ஒரு வாசலோ, கதவோ இருக்கும் என்று யாரும் கருத முடியாது. ஆயினும் இருக்கத்தான் வேண்டும்! சுரங்கப் பாதைக்கு ஒரு இரகசிய வாசல் இருந்தே தீர வேண்டுமல்லவா?

காவலன் தன் வலது கையிலிருந்த தீவர்த்தியை இடது கைக்கு மாற்றிக் கொள்கிறான். வலது கையினால் சுவரில் ஓரிடத்தில் கைவைத்து ஏதோ செய்கிறான். திருகாணியைத் திருகுவது போல் திருகுகிறான். சுவரில் மெல்லிய கோடு போல் ஒரு பிளவு தோன்றுகிறது.

அப்பிளவு வரவரப் பெரிதாகி வருகிறது. ஓர் ஆள் நுழையும்படியான பிளவாகிறது. காவலன் ஒரு கையினால் அதைச் சுட்டிக் காட்டுகிறான். கந்தமாறன் அவனிடம் ஏதோ சொல்லி விட்டுச் சுவரில் தோன்றிய பிளவில் ஒரு காலை வைக்கிறான். ஒரு கால் இன்னும் சுரங்கப் பாதையிலேதான் இருக்கிறது. இப்பொழுது அவனுடைய முதுகுப் பிரதேசம் முழுதும் புலனாகிறது!

ஆகா! இது என்ன? இந்தக் காவலன் என்ன செய்கிறான்? அரையில் செருகியிருந்த கூரிய வளைந்த சிறு கத்தியை எடுக்கிறானே? கடவுளே! கந்தமாறனுடைய முதுகில் ஓங்கிக் குத்தி விட்டானே! படு பாதகன்! ஒருவனுக்குப் பின்னாலிருந்து முதுகில் குத்தும் சண்டாளன்!

வந்தியத்தேவன் தான் ஒதுங்கி நின்று கொண்டிருந்த இடத்திலிருந்து வெளி வந்தான். ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தான்! அந்தச் சத்தத்தைக் கேட்டுக் காவலன் திரும்பினான்! தீவர்த்தியின் ஒளி வந்தியத்தேவனின் கோபாவேச முகத்தில் விழுந்தது.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## புத்திசாலி இராணுவ வீரன்

நீ ஒரு பீப்பாயின் மேல் அமர்ந்து கொள். நான் ஒரு பீப்பாயின் மேல் அமர்ந்து கொள்கிறேன். இந்த இரண்டு பீப்பாய்களில் எதன் மீதாவது அமரவும் உனக்குச் சுதந்திரம் உண்டு.

“இதன் பிறகு நான் ஒரு வயரைச் செருகி வைப்பேன். அதன் முனையையும் பற்ற வைத்து விடுவேன். அது மெல்ல மெல்லக் கனிந்து பீப்பாய்க்குள் போகும். இவ்வாறு பற்ற வைத்த பின்னாலும் யார் ஒருவர் நீண்ட நேரம் வரை கீழே இறங்காமலேயே அந்தப் பீப்பாயின் மேல் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்களோ அவர்களே வெற்றி பெற்றவர். சம்மதமா? அதற்கான தைரியம் உன்னிடமிருக்கிறதா?’ என்று கேட்டார் இஸ்ரேல் பொட்னாம்.

“சரி” என்று வீராவேசமாக ஒப்புக் கொண்டார் ஆங்கிலேய அதிகாரி.

பொட்னாம் எழுந்தார். இரண்டு நீண்ட “ப்யூஸ்” வயர்களை இணைத்து அதைப் பீப்பாய்க்குள் செலுத்தி விட்டு நுனியைப் பற்ற வைத்துவிட்டு அமைதியாகப் பீப்பாய் மேல் வந்து அமர்ந்தார். ஆங்கிலேய அதிகாரியும் ஒரு பீப்பாய் மேல் அமர்ந்திருந்தார்.



நெருப்பு சிறிது சிறிதாகக் கனிந்து பீப்பாயை நோக்கி வர ஆரம்பித்தது. அது பாதித் தொலைவில் வந்தவுடனேயே ஆங்கிலேய அதிகாரி நடுங்கினார்.

“இவன் நம்மைத் துண்டு துண்டாகச் சிதற வைக்கத் திட்டம் தீட்டித்தான் இம்மாதிரி ஏற்பா[illegible]திருக்கிறான்!’ என்[illegible]ணினார். நெருப்பு மெல்ல மெல்ல ஊர்ந்து வந்து கொண்டிருந்தது.

“இது மிகவும் பைத்தியக்காரத்தனமான ஒன்று. இதனால் நாம் இருவருமே வெடித்துச் சிதறி இறந்து விடுவோம். இது பயத்துக்குரிய ஒன்று.’

இஸ்ரேல் பொட்னாம் பேசவில்லை. அவர் முகத்தில் எவ்விதச் சலனமும் இல்லை. பீப்பாயை விட்டு அவர் இறங்கவுமில்லை. [illegible] டார் அவர். திரி எரிந்து பீப்பாய்க்கு வெகு அருகில் வந்து விட்டது.

இன்னும் முப்பது விநாடிகள் தாமதித்தால் நெருப்பு பீப்பாய்க்குள் போய் விடும். அப்படிப் போய் விட்டால்? நினைத்தால் கூடத் தப்பி ஓட முடியாது.

அதற்கு மேல் ஆங்கிலேய அதிகாரியால் அமைதியாக இருக்க முடியவில்லை.

பீப்பாயிலிருந்து துள்ளிக் குதித்து இறங்கினார். திடுதிடுவென அந்த இடத்தைவிட்டு ஓட ஆரம்பித்தார். பாதுகாப்பான இடத்தில் நின்று, திரும்பிப் பார்த்தார். பீப்பாய்க்குள் நெருப்பு நுழைய ஒரு விநாடி இருந்தது. அப்போதும் பொட்னாம் பீப்பாயை விட்டு எழவில்லை.

ஆங்கிலேய அதிகாரியைப் பார்த்துப் புன்முறுவல் பூத்தார்.

“கோழை யார் என்பது புரிந்ததா?’ என்று சப்தமாகக் கேட்டார்.

அவர் அவ்வாறு கேட்டு முடித்தவுடன், பீப்பாய் வெடித்துத் துண்டு துண்டாகச் சிதறி விடும் என்று ஆங்கிலேய அதிகாரி எதிர் பார்த்தார். அவ்விதமான அசம்பாவிதம் எதுவும் நடைபெறவில்லை. பீப்பாய்க்குள்ளும் நெருப்புப் போய்விட்டது.

பொட்னாம் அமைதியாகவே இருந்தார். ஐந்து நிமிடங்களுக்குப் பின் முழுதாக இறங்கி வந்தார் பொட்னாம்.

“இந்தப் பீப்பாய்க்குள் இருப்பது வெடி மருந்து என்றுதானே நீ நினைத்துக் கொண்டிருக்கிறாய். இல்லை, அது வெங்காயம். வெங்காயத்தைச் சமையல் அறையில் கொட்டிய பின் தான் வெடி மருந்து அதில் நிரப்பப்பட வேண்டும்!’ என்று அமைதியாகக் கூறினார்.

ஆங்கிலேய அதிகாரி மிகப் பெரிய அவமானத்தை அடைந்தார். அன்று இரவோடு இரவாக அந்த அதிகாரி அந்தப் பகுதியிலிருந்து வேறு பகுதிக்கு மாற்றல் வாங்கிக் கொண்டு சென்று விட்டார். இந்த அமெரிக்கச் சுதந்திரப் போரில் ஈடுபட்ட அந்த அதிகாரி இஸ்ரேல் பொட்னாம் பின்னாளில் அமெரிக்காவின் இராணுவத் தளபதியானார்.

புத்தி இருந்தால் எதையும் சாதிக்கலாம்.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி ரணில் தலைமையில் தேசிய போர் வீரர் நினைவேந்தல்

## 3,750 இராணுவ அதிகாரிகளுக்கு பதவி உயர்வு

(கொழும்பு)

14 ஆவது தேசிய போர் வீரர் நினைவேந்தல் நிகழ்வு நேற்று ஸ்ரீ ஜயவர்தனபுர தேசிய போர் வீரர் நின்னவுத்தூபியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்றது.

இலங்கையில் கடந்த 30 வருட காலமாக இடம்பெற்ற யுத்தத்தின் போது, நாட்டின் ஒற்றுமை மற்றும் இறையாண்மைக்காக அர்ப்பணிப்புக்களை மேற்கொண்ட முப்படையினர், பொலிஸார் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகள் தேசிய படைவீரர் தின நிகழ்வின் போது நினைவு கூரப்பட்டனர்.

குறித்த தேசிய இராணுவ வீரர்கள் நினைவு தினத்தை முன்னிட்டு இராணுவ அதிகாரிகளுக்குப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய 402 சிரேஷ்ட அதிகாரிகளுக்கும் 3348 ஏனைய அதிகாரிகளுக்கும் இவ்வாறு பதவி நிலை உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

மேலும், பிரிகேடியர் நிலையிலுள்ள 7 அதிகாரிகள் மேஜர் ஜெனரல்களாகவும், கேர்ணல் நிலையிலுள்ள 19 பேர் பிரிகேடியர்களாகவும், லெப்டினன் கேர்ணல்களாகவுள்ள 29 பேர் கேர்ணல்களாகவும், மேஜர்களாகவுள்ள 33 பேர் லெப்டினன் கேர்ணல்களாகவும், கப்டன் நிலையிலுள்ள 118 பேர் மேஜர்களாகவும், லெப்டினன்களாகவுள்ள 97 பேர் கப்டன்களாகவும், இரண்டாம் லெப்டினன்களாகவுள்ள 90 பேர் லெப்டினன்களாகவும் பதவி நிலை உயர்வுகளைப் பெற்றுள்ளனர்.

அதே போன்று படையணிகளின் பிரதானிகள், கோப்ரல் நிலை அதிகாரிகள், லான்ஸ் கோப்ரல் நிலை அதிகாரிகள் மற்றும் சிப்பாய்கள் உள்ளிட்ட பல்ருக்கும் இவ்வாறு பதவி நிலை உயர்வு வழங்கப்பட்டுள்ளதாக இராணுவத் தலைமையகம் தெரிவித்துள்ளது. (ம-7,9)

சுதந்திரம்! அது இல்லாதபோது நிலம்,நீர்,சிறப்பு, செல்வாக்கு ஆகிய எது இருந்தும் என்ன பயன்? சுதந்திரம் தான் மனிதனின் முதல் தேவை.
~ எமர்சன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தெருவில் குப்பை போடுவதை எவராலும் தடுக்க முடியாதா?

எவ்வளவுதான் அறிவார்ந்த சமூகமாக – இனமாக இருந்தாலும் மிகப்பெரும் திறன்களைத் தன்னகத்தே கொண்டிருந்தாலும் மனப்பாங்கில் மாற்றம் ஏற்படவில்லை என்றால், இருக்கக்கூடிய அறிவாலும் திறனாலும் எந்தப் பிரயோசனமும் ஏற்படமாட்டாது.

ஆம், நம் தமிழினம் போருக்குப் பின்பாக எங்ஙனம் நடந்து கொள்கிறதென்பதை ஒரு கணம் நினைத்துப் பாருங்கள்.

தியாகம் செய்த பிள்ளைகளின் குடும்பங்கள் அமைதியாக ஒதுங்கி வாழுகின்றனர்.

ஒரு வீட்டில் மூன்று பிள்ளைகள் போர்க்களத்தில் தங்கள் இன்னுயிரை இத்தேசத்துக்காக ஆகுதியாக்கியுள்ளனர்.

ஆனால் அவை அனைத்தும் மறக்கப்பட்டுவிட்டன.

தியாகத்துக்குரிய குடும்பங்கள் ஒதுங்கி வாழ்கின்றன.

ஆனால் மண் விடுதலைப் போராட்டத்தில் எந்தத் தொடர்பும் இல்லாதவர்கள் தங்களைத் தியாகிகளாகக் காட்ட முற்பட்டுள்ளனர். இது தான் எங்கள் தேசத்தின் இன்றைய நிலைமை.

இவ்வாறான போக்குகள் எங்களிடம் நேர்மை,உண்மை,நன்றியுணர்வு என்பன அறவே இல்லை என்பதையே சுட்டி நிற்கின்றது.

தவிர, எங்களின் உரிமை என்ற விவகாரம் இத்துணைதூரம் சரிவராமல் இழுபடுவதற்குக் காரணம் எங்கள் தமிழ் அரசியலில் இருக்கக்கூடிய ஒற்றுமையின்மை என்பது புரிதற்குரியது.

ஆக, எந்தவிதமான நல்ல நோக்கங்களும் இல்லாமல் ஆசாடத்தனமாக நடக்கின்ற தமிழ் அரசியல் தரப்புகளால் எதனையும் அடைந்துவிட முடியாதென்பது நிறுதிட்டமானது.

உண்மை. தமிழ் மக்களின் இன்றைய நிலைமை எவ்வாறாக இருக்கிறது என்பதை ஒரு கணம் சிந்தித்தால், கட்டுமானப் பணிகள் பல்கிப் பெருகுகின்றன.

அதிலும் வியாபார நிலையத்தை நோக்கமாகக் கொண்ட கட்டுமானங்களே அதிகம் எனலாம்.

இதையும் கடந்து வாகனங்களின் பயன்பாடுகள் அதிகமாகிவிட்டன.

வீட்டில் உள்ள உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு மோட்டார் சைக்கிள் எனில், போக்குவரத்து நெரிசல் எவ்வாறாக இருக்கும் என்பதை நாம் கூறவேண்டிய தேவையிராது.

இதற்கும் அப்பால், மாடிவீடுகளின் அதிகரிப்பு என நம் மக்களின் நிலைமை திருப்தியாக இருந்தாலும் வீட்டுக்குப்பைகளை வீதிகளில் கொட்டுகின்ற கொடுமை நாளுக்கு நாள் பெருகிச் செல்கிறது எனில், எங்களின் சமூகநலச் சுட்டிகள் எவ்வாறாக இருக்கின்றன என்பதை அளவிடுவது கடினமன்று.

ஆக, தனித்து அரசியல் கோசம் போடுபவர்கள் முதலில் எங்கள் மக்களின் மனநிலையை மதிப்பார்ந்த உயர்நிலைக்கு மாற்ற வேண்டும்.

**இல்லையேல் உரிமை கிடைத்தாலும் எங்களில் எந்த ஏற்றமும் மாற்றமும் ஏற்படாதென்பதுதான் கவனிக்கப்பட வேண்டிய விடயம்.**

# வர்த்தகர்கள் அரசியல்வாதிகளின் அடிமைகளாக இருக்கக் கூடாது

## எதிர்க் கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)

வர்த்தகர்கள் அரசியல்வாதிகளின் அடிமைகளாக இருக்கக் கூடாது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார். சிறு மற்றும் நடுத்தர வர்த்தகர்களுடன் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சிறு மற்றும் நடுத்தர வணிகர்களின் முன்னேற்றத்திற்கு வேறாக்கப்பட்ட தனிப்பிரிவொன்று நாட்டு நிர்வாகியின் கீழ் செயல்படுத்தப்பட்டு தெளிவானதொரு கொள்கையுடன் குறிப்பிட்ட கால அட்டவணையுடன் இலக்குடனான பாரிய வேலைத்திட்டத்தை உருவாக்க ஐக்கிய மக்கள் ச்க்தி தயார் எனவும், பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் சிறு மற்றும் நடுத்தர வர்த்தகர்களின் நலனுக்காக தாம் முன்நிற்பதாகவும் இதனை ஓர் சட்ட கட்டமைப்பினுள் முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கான பாதை திறக்கப்படும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

இந்நாட்டு வர்த்தகர்கள் அரசியல்வாதிகளின் அடிமைகளாக மாறாமல் வர்த்தகர்களின் பிரச்சினைகளுக்குப் பதிலளிக்கும் கட்டமைப்பொன்றை நாட்டில் உருவாக்குவதே இடம்பெற வேண்டும் என்றும் எதிர்க்கட்சித்தலைவர் சுட்டிக்காட்டினார்.

தொழில் முயற்சியாண்மையாளர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கும் பழைய போக்கை கைவிட்டு முறைமையொன்றின் ஊடாக பதில் வழங்கும் கட்டமைப்பை உருவாக்குவது அரசியல்வாதிகளின் பொறுப்பாகும் எனவும் பக்கச்சார்பற்ற மற்றும் வெளிப்படைத்தன்மை கொண்ட கட்டமைப்பு அமையும் போது இலஞ்சம் மற்றும் கப்பம் போன்ற பிரச்சினைகளுக்கும் தீர்வு கிட்டும் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

இவ்வாறு வங்குரோத்து சூழ்நிலையில் அரசியல்வாதிகளே முதலில் அர்ப்பணிப்புகளைச் செய்ய வேண்டும் என்றும் எதிர்காலத்தில் ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்தவுடன் அத்தகைய அர்ப்பணாங்களைச் செய்யத்தயார் எனவும் குபேரர்களின் கடன்களை தள்ளுபடி செய்வது கடந்த காலங்களில் மேற்கொள்ளப்படும் அதேவேளையில் சிறு மற்றும் நடுத்தர வர்த்தகர்களின் கடனை அறவிட கடுமையான முறைகளை கையாள்வதுவன்மையாக கண்டிக்கத்தக்கது எனவும் அவர் தெரிவித்தார்.

எந்தவொரு தரப்பினருக்கும் விசேட அங்கீகாரம் வழங்கப்பட்டு கவனிப்பு மேற்கொள்ளப்படுவதை அனுமதிக்கப் போவதில்லை எனவும், சட்டம் அனைவருக்கும் சமமாக அமுல்படுத்தப்பட வேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார். (ம-7,9)

## வழிப்பறியில் ஈடுபட்ட

# பொலிஸ் உத்தியோகத்தர் மக்களால் மடக்கிப் பிடிப்பு

களுத்துறை - மஹவஸ்கடுவ பகுதியில் பெண் ஒருவரிடமிருந்து தங்கச் சங்கிலியை, கொள்ளையிட முயற்சித்த பொலிஸ் உத்தியோகத்தரை பொது மக்கள் மடக்கிப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

பதுரலிய பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரே இவ்வாறு வழிப்பறியில் ஈடுபட்டுள்ளதாரக தெரியவந்துள்ளது.

இந்த நிலையில் குறித்த பொலிஸ் உத்தியோகத்தரை களுத்துறை வடக்கு பொலிஸாரிடம் பொதுமக்கள் ஒப்படைத்தனர். (ம-7,9)

# துபாயிலிருந்து நாட்டுக்குள் 2 கிலோ தங்கம் கடத்த முயற்சி

(கொழும்பு)

துபாயிலிருந்து சுமார் 4 கோடி ரூபா பெறுமதியான 2 கிலோ கிராம் தங்கத்தை நாட்டுக்குள் கடத்தும் முயற்சி முறியடிக்கப்பட்டதாக இலங்கை சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் கொழும்பு பீரதேசத்தைச் சேர்ந்த 35 வயதுடைய வர்த்தகர் ஒரு [illegible]க்கு உட்படுத்தப்பட்டபோது மூன்று பைகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் தங்கத்தை கைப்பற்றியதாக சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்போது விமான நிலைய சுங்கப் பிரிவினர் அத் தங்கத்தை பறிமுதல் செய்ததுடன் 12 இலட்சம் ரூபா அபராதம் விதித்து குறித்த நபரை விடுவித்ததாக [illegible] மேலும் [illegible]. (ம-7,9)

## இன்னும் இரண்டு வாரங்களில்

# மாணவர்களுக்கு பாடப்புத்தகங்கள் விநியோகம் நிறைவடையும்

(கொழும்பு)

நாடு முழுவதும் உள்ள பாடசாலைகளுக்கு 95 வீதமான பாடப்புத்தகங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாகவும் மொத்த விநியோகம்இன்னும்இரண்டுவாரங்களில் நிறைவடையும் எனவும் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கும் பொருளாதாரச் சிரமங்களை எதிர்நோக்கும் மாணவர்களுக்கும் உயர்தர கல்விக்கான புலமைப்பரிசில்களை வழங்கும் நிகழ்வில் நேற்று முன்தினம் உரையாற்றிய அமைச்சர் இதனை தெரிவித்துள்ளார்.

பாடப்புத்தகங்களை அச்சிட உதவிய இந்திய உயர்ஸ்தானிகருக்கு நன்றி தெரிவித்தார். 2023 ஆம் ஆண்டிற்கான பாடப்புத்தகங்களை அச்சிடுவதற்கான பொருட்களை வழங்குவதில் இந்திய உயர்ஸ்தானிகராலயம் எங்களுக்கு ஆதரவளித்தது.

மூன்று மொழிகளில் 350 வகையான பாடப்புத்தகங்களை அச்சிட அரசாங்கம் 16 பில்லியன் ரூபாவினை செலவிட்டுள்ளது. இது முந்தையதை விட நான்கு மடங்கு அதிகம் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அரச அச்சுக் கழகம் இந்தியா வழங்கிய உதவியின் மூலம் தேவையான 45% புத்தகங்களை மூலப் பொருட்களைப் பெற்று வழங்கியது. மீதமுள்ள 55% 22 தனியார் அச்சக நிறுவனங்களால் அச்சிடப்படுகிறது என்றார். (ம-7,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத மணல் அகழ்வு கிளி.கல்லாற்றில் அதிகரிப்பு

## அப்பகுதி மக்கள் குற்றச்சாட்டு

(தருமபுரம்)

தருமபுரம் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட கல்லாற்றுப் பகுதியில் பல ஏக்கர் வனப்பகுதி சட்ட விரோத மணல் அகழ்வு காரணமாக அழிக்கப்படுவதாகவும் இதனால் பறவைகள், தேசிய பூங்காவும் அழிவடையும் அபாயத்தை எதிர்கொண்டுள்ளதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில், தொடர்ச்சியாக மணல் அகழ்வு இடம்பெறுவதால் கடல் நீர், குடியிருப்புக்குள் உட்புகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

அடிக்கடி டிப்பர் வாகனங்கள் சென்று வருவதால் வீதிகள் பழுதடைந்து குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது.



இதனால் பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள், நோயாளர்கள் போக்குவரத்து மேற்கொள்வதில் கடும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இது தொடர்பில் உரிய தரப்பினரோ பொலிஸாரோ எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. இந்நிலை தொடருமாக இருந்தால் குறித்த பகுதியில் இருந்து மக்கள் வெளியேற வேண்டிய நிலையும் ஏற்படும் எனவும் தெரிவித்தார். (4-6-316)

# கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்று டெங்கு ஒழிப்பு செயற்றிட்டம்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் டெங்கு பரவலை கட்டுப்படுத்தும் நோக்கில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மற்றும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் ஒழுங்கு படுத்தலில் டெங்கு ஒழிப்பு செயற்றிட்டம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப் பட்டு வருகின்றது.

அதனடிப்படையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை பணிப்பாளரின் ஏற்பாட்டில் குறித்த வைத்தியசாலை பகுதிகளை டெங்கு அற்ற சூழலாக மாற்றுவதற்கான சிரமதான வேலைத்திட்டம் நேற்று வெள்ளிக்கிழமை காலை முன்னெடுக்கப்பட்டது.



கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை, பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை, மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு, கிளிநொச்சி மாவட்ட செயலகம், சிவில் பாதுகாப்பு திணைக்களம், கரைச்சி பிர தேச சபையினர், சர்வோதயம், இலங்கை செஞ்சிலுவைச் சங்க கிளிநொச்சி மாவட்ட கிளையினர், பொலிஸ் திணைக் களம், இளைஞர் கழகம், சமூக மட்ட அமைப்புகள், சமூக தொண்டர் அமைப்புகள், கிளிநொச்சி மகா வித்தியாலய பழைய மாணவர்கள், **Rota ract Club, AMC, RARC** எனப் பல்வேறு தரப்பினரும் இணைந்து சிரமதான முறையில் இந்த வேலைத் திட்டத் தினை முன்னெடுத்தனர்.

இதன் போது டெங்கு நுளம்புகள் பெரு கக் கூடிய இடங்களான குப் பைகள், வெற்றுப் போத்தல்கள், நீர் தேங்கக் கூடிய இடங் கள் சிரமதானம் மூலம் துப்புரவு செயப்பட்டு பெருமளவான திண்மக் கழிவுகள் தரம் பிரிக்கப்பட்டு கரைச்சி பிரதேச சபையினரின் உதவியுடன் அப்புறப்படுத்தப் பட்டன. (4-6-315)

# அபிவிருத்தி குழுக் கூட்டங்களுக்கு கூட்டமைப்பு எம்.பிக்கள் வருவதில்லை

## வவு.மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு

(குருமன்காடு)

மாவட்ட மற்றும் பிரதேச செயலக அபிவிருத்திக் குழுக் கூட்டங்களுக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் வருவதில்லை என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் வவுனியா மாவட்ட அபிவிருத்தி குழு தலைவருமான கு.திலீபன் தெரிவித்துள்ளார்.

வவுனியா பிரதேச செயலகத்தில் நேற்று இடம்பெற்ற அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட பின் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாவட்ட மற்றும் பிரதேச செயலக அபிவிருத்திக் குழு கூட்டங்களுக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் வருவதில்லை. ஆனால் தனிநபர்களின் பிரச்சினைக்கு உடனடியாக வருகிறார்கள். மன்னாரில் இடம்பெற்ற மண்ஆட்களின் பிரச்சினையில் சில மதகுருமாருடன் இணைந்து சில பாராளுமன்ற உறுப்பினர்கள் உடனடியாக மண் அள்ளுவதற்கான அனுமதியை பெற்றுக் கொடுத்துள்ளார்கள்.

இதைவிட, மக்கள் எதிர்நோக்கும் பல பிரச்சினைகள் உள்ளன. இதேபோல் அந்த பிரச்சினைகளையும் பேசி மக்களுக்கான தீர்வை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

சில நாட்களுக்கு முன் ஜனாதிபதி தலைமையில் கூட்டம் இடம்பெற்றது. அந்தக் கூட்டத்தில் அபிவிருத்தி சார்ந்த எந்த கருத்துக்களையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் பேசவில்லை. மாறாக தொல்பொருள் சம்மந்தப்பட்ட பிரச்சினை தான் பேசப்பட்டது.

மக்களின் வாழ்வாதாரம், வயற்காணிகளை விடுவித்தல், தொழில் துறைகளை ஏற்படுத்துதல் தொடர்பில் அங்கு பேசவில்லை. எங்களுக்கு கிடைத்த சந்தர்பத்தில் காணிவிடுவிப்பு, காணி ஆவணங்களை பெற்றுக் கொடுத்தல், நிலஅளவை பிரச்சினைக்கு தீர்வு காணல் தொடர்பில் பேசி முன்னேற்றம் கண்டுள்ளோம்.

அதன் ஒரு கட்டமாக வட இலாகாவுடன் பேசி காணிகள் விடுவிக்கப்படுகிறது. மத்திய தர வர்க்கத்தின் காணிகள் விடுவிக்கப்படுகிறது. ஆவணங்கள் வழங்கப்படுகிறது. எனவே நாங்கள் சந்தர்ப்பத்தை சரியாக பயன்படுத்தி வருகிறோம் எனத் தெரிவித்தார். (4-6-250)

## மாணவிகளைக் கடத்த முயற்சி

# அடையாள அணி வகுப்பில் இருவர் சிக்கினர்

(மன்னார்)

தலைமன்னார்ப் பகுதியில் மூன்று மாணவிகளை கடத்த முற்பட்டதாக தெரிவிக்கப்பட்டு தலைமன்னார் பொலிஸாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட இரு சந்தேகநபர்களுக்கான அடையாள அணிவகுப்பில் மூன்று சிறுமிகளும் இரு சந்தேக நபர்களையும் அடையாளம் காட்டியுள்ளனர்.

தலைமன்னார் கிராமம் பகுதியில் மூன்று சிறுமிகளை வெள்ளை வானில் கடத்த முற்பட்டதாக இரு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டு மன்னார் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட நிலையில் அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இவர்களுக்கான வழக்கு விசாரணை மீண்டும் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மன்னார் நீதிவான் நீதிமன்றில் நீதிபதி கே.எல்.எம். சாஜீத் முன்னிலையில் அழைக்கப்பட்டு சந்தேகநபர்களை அடையாளம் காட்டுவதற்காக நீதி மன்றம் மூடப்பட்ட நிலையில் அடையாள அணிவ குப்பு இடம்பெற்றது. இதன் போது பாதிப்புகளுக்கு உள்ளான மூன்று சிறுமிகளும் இரு சந்தேக நபர்களையும் அடையாளம் காட்டியுள்ளனர். இச் சந்தேக நபர்களை எதிர்வரும் 1 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தர விட்டார். (4-6-285)

# பறவைகள் தேசிய வனப்பூங்காக்குள் நுழைந்த மூவர் கைது

(தருமபுரம்)

கண்டாவளைப் பிரதேச செயலாள் பிரிவுக்கு உட்பட்ட புளியம்பொக்கணை வண்ணத்தியாறு பகுதியில் அமைந்துள்ள பறவைகள் தேசியவனப்பூங்கா பகுதியில் அனுமதி இன்றி தடிகளை வெட்டிய குற்றச்சாட்டிலும் மற்றும் காட்டுக்குள் பாதை அமைக்க முயற்சித்த குற்றச்சாட்டிலும் மூன்று சந்தேகநபர்கள் வன ஜீவராசி திணைக்களத்தினால் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய் யப்பட்டவர்கள் கிளிநொச்சி நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி வனஜீவராசிகள் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர். (4-6-316)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 400 | 320 | 320 | 400 |
| உருளைக்கிழங்கு | 200 | 190 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 200 | 120 | 150 | 200 |
| தக்காளி | 400 | 400 | 400 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 200 | 180 | 200 |
| கோவா | 350 | 60 | 280 | 400 |
| கரட் | 200 | 330 | 280 | 400 |
| பூசணி | 100 | 80 | 60 | 100 |
| புடோல் | 150 | 160 | 120 | 300 |
| வாழைக்காய் | 100 | 90 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 350 | 380 | 380 | 450 |
| பெரிய வெங்காயம் | 130 | 140 | 130 | 140 |
| பாகற்காய் | 400 | 1000 | 350 | 600 |
| வெண்டக்காய் | 160 | 160 | 140 | 300 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 120 | 200 |
| பயற்றங்காய் | 200 | 700 | 120 | 120 |
| லீக்ஸ் | 300 | 300 | 350 | 450 |
| பீற்றூட் | 260 | 200 | 300 | 400 |
| கறிமிளகாய் | 300 | 400 | 200 | 400 |
| முருங்கைக்காய் | 600 | 800 | 450 | 1000 |
| போஞ்சி | 550 | 600 | 600 | 600 |
| கத்தரிதம்புள்ள | 350 | 280 | 250 | 400 |
| கீரை - 1 பிடி | 120 | 100 | 150 | 140 |
| தேசிக்காய் | 350 | 400 | 380 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 90 | 80 | 80-110 |
| இராசவள்ளி | 350 | 200 | 280 | 35 |
| வெங்காயப்பூ | — | 800 | 400 | — |
| முள்ளங்கி | 80 | — | 120 | 250 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 80 | 50 |
| வல்லாரை | 40 | 25 | 50 | 40 |
| ஈரப்பலா | 100 | — | — | — |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெப்பம் மேலும்...

மற்றும் வடமேல் மாகாணங்களிலும் மொனராகலை மாவட்டத்திலும் அதிகரித்த வெப்பம் நிலவக்கூடும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

குறித்த பகுதிகளில் வசிக்கும் மக்கள் போதுமானளவு நீரை அருந்துமாறும், இயலுமான வரை நிழலான பகுதிகளில் ஓய்வெடுக்குமாறும் வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (ம-7,9)

## உடுப்பிட்டியில்...

(வயது-57) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

காலையில் அவர் வீட்டின் பின்புறம் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாகக் காணப்பட்டார்.

சம்பவ இடத்திற்கு சென்ற பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா விசாரணைகளை மேற்கொண்டார்.

வல்வெட்டித்துறை பொலிஸார் சாட்சிகளை நெறிப்படுத்தினர். சடலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டு பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (ம-7,9,60)

## வவு.வில்...

பயிலும் மாணவர் குழு ஒன்று வவுனியா வைரவ புளியங்குளம் வீதியில் வைத்து ஒரு மாணவனை தலைக்கவசம், கொட்டன் தடி கொண்டு சரமாரியாக தாக்கி அதனை காணொளியாக ரிக்ரொக்கில் சாகசம் காட்டி பதிவு செய்துள்ளது.

இதனை தொடர்ந்து பாதிக்கப்பட்ட மாணவன் பொலிஸில் முறைப்பாடு செய்ததனைத் தொடர்ந்து குறித்த வன்முறைச் சம்பவத்துடன் தொடர்புடைய ஒரு மாணவனை நேற்று முன்தினம் பொலிஸார் கைது செய்து விளக்கமறியலில் வைத்துள்ளதுடன், நேற்றைய தினம் குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய இன்னொரு மாணவனையும் கைது செய்து தடுப்புக்காவலில் வைத்துள்ளனர்.

மேலும் இச் சம்பவத்தின் முக்கிய ஆதாரமான காணொளியை ஆதாரமாக கொண்டு இதனுடன் தொடர்புடைய ஏனையவர்களை தேடும் பணியினை பொலிஸார் மேற்கொண்டு வருவதுடன் விசாரணைகளையும் முன்னெடுத்துள்ளனர். (ம-7,9)

## மேலும் சில...

நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

ருவன்வெல்ல பகுதியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துரைக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

டொலரின் பெறுமதி குறைவடையும் போது பொருட்களின் விலைகளும் நியாயமான முறையில் குறைக்கப்பட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் இந்த விடயம் தொடர்பில் நிதி அமைச்சின் வர்த்தக கொள்கைத் துறை, மற்றும் நுகர்வோர் விவகார அமைச்சு என்பன ஆராய்ந்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பாடசாலை உபகரணங்கள் உள்ளிட்ட ஏனைய அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை குறைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் எனவும் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7.9)

## தேர்தலை...

தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பேச்சு மற்றும் கருத்துச் சுதந்திரம் அரசியலமைப்பின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும், அமைதியான முறையில் போராட்டம் நடத்தும் சுதந்திரம் கூட நாட்டில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் மக்களின் அடிப்படை உரிமைகள் மற்றும் ஜனநாயக உரிமைகளை இந்த அரசாங்கம் தொடர்ந்தும் மீறும் நிலையை எட்டியுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இந்நாட்டு மக்கள் தமது ஜனநாயக உரிமைகளை நடைமுறைப்படுத்த சுதந்திரம் இருக்க வேண்டும் எனவும், அரசாங்கம் இதனை இல்லாதொழிப்பதை எதிர்க்கட்சி என்ற ரீதியில் வன்மையாக நிராகரிப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

தேர்தலை இடைநிறுத்தி சர்வாதிகார ஆட்சியை மேற்கொண்டு மக்களின் அடிப்படை உரிமைகளைக் கூட இந்த அரசாங்கம் மீறிவருவதாகவும், இவ்வாறான போக்குடைய அரசாங்கத்துடன் தனக்கோ அல்லது மக்களுடன் தொடர்புள்ள தமது கட்சியில் உள்ள எவருக்குமோ எந்த தொடர்புமில்லை எனவும், இந்த மக்கள் விரோத அரசாங்கத்துடன் ஒருபோதும் இணைந்து கொள்ளப் போவதில்லை எனவும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார். (ம-7,9)

## இலங்கையின்...

இலங்கை தற்போது எதிர்நோக்கும் பொருளாதார சவால்களை முறியடித்து பொருளாதாரத்தை மீட்டெடுப்பதில் அடைந்துள்ள முன்னேற்றம் குறித்து கனேடிய உயர்ஸ்தானிகர் எரிக் வோல்ஷ் மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளார்.

கனடா மற்றும் இலங்கைக்கிடையிலான இருதரப்பு உறவுகள் குறித்து இருதரப்பினருக்கிடையிலான சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

தற்போதைய பொருளாதார சவால்களை வெற்றி கொள்வதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் வடக்கு - கிழக்கு வாழ் சிறுபான்மையினர் தொடர்பான பிரச்சினைகளை தீர்ப்பதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்தும் அவர் எரிக் வோல்ஷ்க்கு விளக்கியுள்ளார்.

இதேவேளை, தற்போது கனடாவில் வாழும் இலங்கை வர்த்தகர்களுக்கு நாட்டில் முதலீடு செய்வதற்கு வாய்ப்பு உள்ளதாகவும் தினேஷ் குணவர்தன சுட்டிக்காட்டியுள்ளார். (ம-7,9)

## சர்வ...

தீர்மானத்தை முன்வைத்துள்ளனர்.

தமிழர் தாயகத்தில் இலங்கை இராணுவத்தின் தொடர்ச்சியான ஆக்கிரமிப்பு மற்றும் ஒடுக்குமுறை தொடர்வதாக இந்த தீர்மானம் சுட்டிக் காட்டுகிறது.

6ஆவது சட்டத்திருத்தம், தமிழர்கள் சுதந்திரம் கோரி குரல் கொடுப்பதைத் தடுக்கிறது.

அத்துடன் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு அனுப்பவும், ஈழத் தமிழர்களின் பாரம்பரிய தாயகத்தை அங்கீகரிக்கவும் இந்த தீர்மானத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

26 ஆண்டுகால ஆயுதப் போராட்டம் பல்லாயிரக்கணக்கான தமிழர்களின் மரணத்திற்கு வழிவகுத்தது, "காணாமல் போனது, துஷ்பிரயோகங்கள் மற்றும் இடம்பெயர்வுகள்" மற்றும் "மனித உரிமை மீறல்களுக்கு இலங்கையின் தண்டனையின்மை" ஆகியவற்றை இந்த தீர்மானம் சுட்டிக்காட்டியுள்ளது.

2009ஆம் ஆண்டு தமிழ் இனப்படுகொலை நடந்து 14 வருடங்கள் கடந்துள்ள போதிலும், இலங்கையில் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் குற்றவாளிகளுக்கு பொறுப்புக்கூறத் தவறியதுடன், குற்றவாளிகளை முக்கிய அரசியல் பதவிகளுக்கு உயர்த்தியது.

மேலும், 2015இல் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவைக்கு வழங்கிய வாக்குறுதிகளை 2020இல் இலங்கை புறக்கணித்தது.

"போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்களைச் செய்ததாகக் கூறப்படும் குற்றவாளிகளை நீதியின் முன்நிறுத்த எந்த முயற்சியும் எடுக்கப்படவில்லை.

சிறிய வழக்குகளில் கூட விசாரணைகள் ஆரம்பிக்கப்படவில்லை. அதேநேரம் சாட்சியங்கள் சேகரிப்பது அரசின் தன்னிச்சையான கைதுகள் மற்றும் அச்சுறுத்தல்களால் தடைபடுகிறது என்றும், அமெரிக்க பாராளுமன்ற உறுப்பினர் டெபோரா ரோஸ் மற்றும் அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர் பில் ஜோன்சன் ஆகியோர் முன்வைத்துள்ள தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7,9)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 19/05/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1574
வெற்றி இலக்கங்கள்
மேஷம் 4 4 9 3 4 7
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.05.19
சீட்டிழுப்பு இலக்கம் - 1149
B 11 35 45 61
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2023.05.19
சீட்டிழுப்பு இலக்கம் 3361
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
A 02 19 20 56
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 19/05/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1467
A 09 24 29 50 52

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.05.19
சீட்டிழுப்பு இலக்கம் 428
கும்பம் 07 26 45 58 கும்பம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/05/19
சீட்டிழுப்பு இலக்கம் 5119
N 5 3 3 7 8 3
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2093
நிறம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.05.19
தினம் வெள்ளிக்கிழமை
K 02 09 15 52
வெல்லப்பட்ட மொத்தம் பரிசுத் தொகை ரூ. 3,832,700/-

சனிதா
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2023.05.19
வெற்றி வாரம்: 4254
வர்ணம்: செம்மஞ்சள்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 45,722,127.30
வெற்றி இலக்கங்கள் 03 41 65 69
ஆங்கில எழுத்து P

சசிரி
வெற்றி வாரம் 325
சீட்டிழுப்பு திகதி 2023.05.19
பச்சை
வெற்றி இலக்கங்கள் 03 12 48
வெல்லப்பட்ட மொத்தத் பரிசுத் தொகை ரூ. 2,907,700/-

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,967,937.60
திகதி 2023-05-19
வெற்றி வாரம் 3805
வர்ணம் கரும் நீலம்
வெற்றி இலக்கங்கள் 31 43 44 55
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,255,700/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
P 08 15 35 60 64
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 331,072,677.80
1269
2023.05.19 வெள்ளி

அட கோடிபதி
வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம்: 1919
சீட்டிழுப்பு திகதி: 2023.05.19
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 50,911,856.20
வெற்றி இலக்கங்கள் 25 50 54 65
ஆங்கில எழுத்து V


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் ஒட்டுமடத்தில் 54 பரப்பு காணி விற்பனைக்கு**

- யாழ்ப்பாணத்தில் இருந்து அராலி வட்டுக்கோட்டை செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
- யாழ் நகரில் இருந்து 1 ½ km தூரத்தில்.
- நான்கு பரப்பாகவும் மூன்று பரப்பாகவும் இரண்டு பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- ஒரு பரப்பின் விலை எட்டு இலட்சம் 800,000/= மட்டும் (15570)

**076 739 0413**

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 30 பரப்பு காணி விற்பனைக்கு**

- பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து மட்டுவில் செல்லும் வீதியில்
- புத்தூர் பிரதான தண்ணீர்த் தாங்கி அருகாமையில்
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- ஒரு பரப்பின் விலை இரண்டு இலட்சம் ரூபாய் மட்டும். (15570)

**077 638 5683**
**076 755 8606**

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கல்வியங்காட்டில் 84 பரப்பு காணி விற்பனைக்கு**

- கல்வியங்காட்டு சந்தியில் இருந்து 1 ½ km தூரத்தில் பருத்தித்துறை வீதியில் இருந்து 1200m தூரம் (இலங்கை நாயகி அம்மன் கோயில் முன் வீதி
- கல்வியங்காடு புதிய செம்மணி வீதியில் மடத்தடியில்
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- குடியிருப்புகள் சூழ உள்ள காணி
- ஒரு பரப்பின் விலை மூன்று இலட்சம் ரூபாய் 300,000/= மட்டும் (15570)

**076 436 5814**
**077 065 4525**

## VILLAGE HOTEL

யாழ் - கொழும்பு பஸ் சேவை
மீண்டும் ஆரம்பம்

AIRPORT PICK UP DROP SERVICE

அன்னை முத்துமாரி பேருந்து சேவை இனிவரும் காலங்களில் VILLAGE HOTEL எனும் பெயரில் அதே நிர்வாகத்தின் கீழ் இயங்கும் என்பதை அறியத் தருகின்றோம்



077 544 8503 (15337)

## IELTS - New Batch ஆரம்பம்

Sp.Offer 10% Discount
உடன் Basic & Advance
Grammar Classes, First Class
(Free of Charge)
இல. 53, சிவகுருநாதர் வீதி,
**Brown Rd, Jaffna.**
077 798 9830 By:- B.MURALI (15559)

வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கான Student Visa மற்றும் Work Visa ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்

- ✓ ONLINE APPLICATIONS
- ✓ VISA APPOINTMENTS
- ✓ PASSPORT APPLICATION
- ✓ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.




Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீட்டித்து தரப்படும் (C-6584)

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம். V2 TRAVELS

0777-068-777

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள் **V2 TRAVELS**

எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம்
• சாவகச்சேரி • மானிப்பாய்
• நெல்லியடி • பருத்தித்துறை
• திருகோணமலை • வல்வெட்டித்துறை
• கோப்பாய் • புத்தூர்
• பண்டத்தரிப்பு • சங்கானை
• கொழும்பு (C-6584)

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கீரிமலையில் 56 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு.**



- கீரிமலையில் இருந்து மாதகல் செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்.
- 18 அடி பாதையுடன் இரண்டு பரப்பாகவும், மூன்று பரப்பாகவும், பிரிக்கப்பட்ட நிலையில்.
- நல்ல சூழல், நன்னீர் ஊற்று நிலம், குடியிருப்புகள் சூழ உள்ள காணி.
- கீரிமலை சிவன் கோவில் (நகுலேஸ்வரம்) இருந்து 1 km தூரம்.
- திருமண மண்டபங்கள், வியாபார நிலையங்கள், சுற்றுலா விடுதிகள், வீடுகள் அமைக்க உகந்த இடம்.
- காணியின் வடக்கு எல்லை – கடல், தெற்கு எல்லை – பிரதான காபற் வீதி முகப்பு (மாதகல் – கீரிமலை).
- ஒரு பரப்பின் விலை ஒன்பது இலட்சம் ரூபாய் (900,000/=).

**076 911 9371, 076 739 0413,**
**077 874 8135** (15571)


# நன்றி நவிலலும்
# ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



கடந்த 23.04.2023 அன்று இவ்வுலக வாழ்வை நீத்து இறைபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி

## அமரர் சந்திரசேகரம் தவமணிதேவி

அவர்கள் திடீர் சுகயீனம் அடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த வேளை சிகிச்சை அளித்த வைத்தியர்கள், தாதியர்கள், ஊழியர்கள் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலைக்கு சமூகமளித்து அஞ்சலி செலுத்தியோர். நடைபெற்ற இறுதிக்கிரியைகளை முன்னெடுத்த குருமார்கள், இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டு ஆறுதல்களை கூறியோர், தொலைபேசி வாயிலாக, சமூக வலைத் தளங்களூடாக அனுதாபங்களைப் பகிர்ந்து கொண்டோர், அஞ்சலிப் பதாதைகள் வெளியிட்டோர், இறுதிப்பயணத்தில் பங்குகொண்டோர் மற்றும் சகல வழிகளிலும் உதவிய அனைத்து நல் உள்ளங்கட்கும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம் அத்தோடு.

எங்கள் குடும்பத் தலைவியின் அந்தியேட்டிக் கிரியைகள் 21.05.2023 நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 5.00 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வு 23.05.2023 செவ்வாய்க்கிழமை பகல் 11.00 மணிக்கு அன்னாரது இல்லத்திலும் நடைபெறும். அதனைத் தொடர்ந்து அல்லையம்பதி வடிவேலர் மணிமண்டபத்தில் மதியபோசன நிகழ்வும் இடம்பெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

அல்லையம்பதி துன்னாலை,
கரவெட்டி. (C-6582) **குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.05.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.